**செய்தி வெளியீடு எண்:150** **நாள்:24.02.2021**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் **73–**வது பிறந்த நாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று **(24.2.2021)** சென்னை, காமராஜர் சாலை, டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் வைக்கப்பட்டுள்ள, திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் **73–**வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முழுவதும் **73** லட்சம் மரக்கன்றுகள் நடும் வகையில், மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று **(24.2.2021)** சென்னை, காமராஜர் சாலை, டாக்டர் ஜெ ஜெயலலிதா வளாகத்தில் நடைபெற்ற விழாவில், மகிழம் மரக்கன்றினை நட்டு, திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். மேலும், தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு **2021–**ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருதினை செல்வி தே.நர்மதா அவர்களுக்கும், மாநில பெண் குழந்தை பாதுகாப்பு தின விருதுகளை நாமக்கல், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கும் வழங்கினார்கள்.

தமிழ்நாட்டில் வனம் மற்றும் மரங்களின் பரப்பை அதிகரித்திட, தமிழகத்தின் பசுமைப் போர்வையை வனத்திற்கு வெளியே அதிகரிக்கும் நோக்கில் காலியிடங்களில் அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்கும்

மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளையொட்டி, 2012–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு முழுவதும் மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 73–வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முழுவதும் 73 லட்சம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன.

இந்த மரக்கன்றுகளை நடும் பணியானது பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும். மேலும் இம்மரக்கன்றுகள் வனப்பகுதிகளிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும், பூங்காக்களிலும், பெரிய அளவிலான குடியிருப்புகளிலும் நடப்பட்டு பராமரித்து பாதுகாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டு பருவநிலை மற்றும் மண்வளத்திற்கு ஏற்ற மரக்கன்றுகளான ஆல், இலுப்பை, புன்னை, மந்தாரை, புங்கன், மகிழம், பூவரசு, வேம்பு போன்ற பல்வேறு மரக்கன்றுகள் நடப்படும். இந்த மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டம், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளால் இணைந்து செயல்படுத்தப்படுகின்றன.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் 2017–18ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில், "பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் பாராட்டு பத்திரமும், 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, 2018–ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் பெண் குழந்தைகள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு சாதனை புரிந்து வரும்

18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைக்கு ‘‘பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருது’’ வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2021–ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருதினை திருவள்ளூர் மாவட்டம், பூண்டி வட்டாரம், வேலகாபுரம், மேட்டுக் காலனியைச் சேர்ந்த செல்வி தே.நர்மதா அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கி பாராட்டினார்கள். இவர் தனது கிராமத்தில் குழந்தைகள் பாதுகாப்பு உறுப்பினராகவும், கிராம முன்னேற்ற குழு உறுப்பினராகவும் இருந்து சேவை செய்து வருகிறார். மேலும், அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தனது கிராமத்தை, குழந்தை நேய கிராமமாக மாற்ற பெரும் முயற்சி மேற்கொண்டு வருவதுடன், பெற்றோர் மத்தியில் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வுயை ஏற்படுத்தி வருகிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.2.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், “பெண் சிசுக்கொலைகளை தடுத்திட தொட்டில் குழந்தை திட்டத்தினை நாட்டிலேயே முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழ்நாட்டில், பெண் சிசுக் கொலைகள் குறைந்து வரும் நிலையில், சில மாவட்டங்களில் மட்டும், குழந்தைகள் பாலின விகிதம் சராசரி பாலின விகிதத்தை காட்டிலும் குறைவாக உள்ளது. அதனை கருத்திற் கொண்டு, குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு முதல் மூன்று பரிசுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் வழங்கப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

அதன்படி, பெண் குழந்தைகளின் பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்திட தீவிர செயல்பாடுகளை மேற்கொண்டு, சிறப்பாக பணியாற்றிவரும் 3 மாவட்ட நிர்வாகங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் 2021–ஆம் ஆண்டிற்கான முதலிடத்திற்கான மாநில பெண் குழந்தை பாதுகாப்பு தின விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட நாமக்கல் மாவட்டத்தின் சார்பில் நாமக்கல்

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே. மெகராஜ், இ.ஆ.ப., அவர்களுக்கு தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழும், இரண்டாம் இடத்திற்கான மாநில பெண் குழந்தை பாதுகாப்பு தின விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட தருமபுரி மாவட்டத்தின் சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ்.பி. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்களுக்கு வெள்ளிப் பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழும், மூன்றாம் இடத்திற்கான மாநில பெண் குழந்தை பாதுகாப்பு தின விருதிற்கு தேர்வு செய்யப்பட்ட திருவண்ணாமலை மாவட்டத்தின் சார்பில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்களுக்கு வெண்கலப் பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப.,சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. தெ.பாஸ்கர பாண்டியன் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**